செய்தி வெளியீடு எண்:712 நாள்:13.09.2021

# <u>செய்தி வெளியீடு</u>

## ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தில் ரூ.4.29 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இறகுப்பந்து விளையாட்டுக் கூடம், பூங்காக்கள் உள்ளிட்ட முடிவுற்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (13.9.2021) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தில் 4 கோடியே 29 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இறகுப்பந்து விளையாட்டுக் கூடம், பூங்காக்கள், மழைநீர் கால்வாயுடன் கூடிய நடைபாதை மற்றும் உட்புறச் சாலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தைச் சுற்றியுள்ள காலி மைதானங்களில் பூங்காக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் விடுதி ஆகிய பகுதிகளையொட்டியுள்ள சாலையில் ஸ்டீல் கைப்பிடியுடன் கூடிய நடைபாதை, சுவாமி சிவானந்தா சாலை மற்றும் வாலாஜா சாலை உட்புற சாலைகளில் கான்கிரீட் சாலை மற்றும் மழைநீர் வடிகால்களில் சிறப்பு பராமரிப்பு பணிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகப் பகுதிகளில் இரண்டு இறகுப்பந்து விளையாட்டு மைதானங்கள் ஆகியவை 4 கோடியே 29 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இறகுப்பந்து விளையாட்டுக் கூடத்தை திறந்து வைத்து இறகுப்பந்து விளையாடியதோடு, பூங்காக்களையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.கு.பிச்சாண்டி, சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை செயலாளர் திரு. கி. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9